# புத்தகம் படிப்பதால் அறிவு வளராது



இரா. விஜயகுமாரன்

# புத்தகம் படிப்பதால் அறிவு வளராது

**இரா.விஜயகுமாரன்**

This edition first published on July, 2014 by Kumar Publications

R.Vijayakumaran has asserted his right to be identified as the author of this Work in accordance with Indian Copyright Law.

Copyright © R.Vijayakumaran. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior permission of the copyright owner.

www.vijayakumaran.in

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| மனசாட்சியும், நீதியும் | 18 |
| வேறுபாடுகள் | 19 |
| கலப்பு திருமணம் | 25 |
| பாதுகாப்பும், சுதந்திரமும் | 26 |
| யார் ஞானி ? | 28 |

# முன்னுரை

புத்தகம் படிப்பதால் அறிவு வளராது என்று கூறிவிட்டு எதற்காக இந்த புத்தகத்தை எழுதவேண்டும்? புத்தகமே பயன் அற்றது என்றால் இந்த புத்தகம் எதற்கு என்று நீங்கள் நினைக்கலாம்!

பலருக்கு புத்தகம் படித்தால் அறிவு வளரும், ஆனால் எனக்கு புத்தகம் எழுதியதால் அறிவு கிடைத்தது. அந்த அறிவை மையமாக வைத்து இந்த புத்தகத்தை எழுதி உள்ளேன்.

இது வரை நான் நான்கு புத்தகங்களை எழுதி உள்ளேன்.

1. உன்செயலுக்கு நீ காரணம் அல்ல...
2. ஏழாவது அறிவு.
3. தூக்குத் தண்டணையும், கடவுளும்.
4. மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டம்...

இந்த புத்தகங்கள் கற்பனையை பயன்படுத்தி உணர்வை மையமாக வைத்து எழுதிய கதை புத்தகங்கள் அல்ல. அறிவை பயன் படுத்தி எழுதிய ஆய்வு புத்தகங்கள், "மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டம்" என்ற புத்தகம் வெளியிடுவதற்கு முன்பு வரை இரண்டு மொழிக்கொள்கையை வலியுறுத்தி வந்த தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள், இந்த புத்தகம் வெளிவந்த பிறகு அனைத்து மாநில மொழிகளும் தேசிய மொழியாக்கப்பட வேண்டும் என்று கூறுவது என்னுடைய எழுத்துக்கு கிடைத்த முதல் பெரிய பலனாக எண்ணுகின்றேன்.

1. நம்முடைய சிந்தனை நமக்கு கட்டுப்பட்டு இல்லை!
2. நம்முடைய செயல் நமக்கு கட்டுப்பட்டு இல்லை!

3. நாம் ஒரு கல்லைப் போல்தான், வெளி சக்தி இயக்கினால் தான் இயங்க முடியும்!
4. நான் தான் இதை செய்தேன் என்று நாம் நினைப்பது கானல் நீரைப்போன்று மாயை!
5. விதி என்பது அறிவியல் உண்மை, எது நடக்குமோ அது நடந்தேதீரும்!
6. கடவுள் இல்லை, ஆனால் கடவுளை வணங்கினால் நல்லது!
7. எதை நாம் பார்த்தோமோ, எதை நாம் கேட்டோமோ அது நம் அனுமதி இல்லாமலேயே நம்மை ஆளும்!
8. அறிவை அறிவால் ஆளுமை செய்வது தான் ஏழாவது அறிவு!
9. எது உண்மைக் காதல்?
10. மனசாட்சியும், நீதியும்.
11. யாரும் தண்டனைக்கு உரியவர் அல்ல!
12. மதம் கடவுளுக்காக அல்ல, மனிதனுக்கு ஒழுக்கத்தை கற்பிக்க உருவாக்கப்பட்டது!
13. சனநாயகம் என்றால் அனைவரும் சமம். அனைவரும் சமம் என்றால் அனைத்து மாநில மொழியும் இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும்.
14. சமுதாயத்தின் அறிவு வளர வளர நீதியும் மாற வேண்டும்.
15. அறிவால் அனைவரும் சமம்.

இது போன்று புத்தகங்களில் இது வரை யாரும் சொல்லாத பல தகவல்களை நான் எழுதி இருந்தேன்.

இந்த புத்தகத்தை படித்தவர்களில் பத்து சதவிகிதப் பேர்களுக்கு மட்டும். தான் இந்த புத்தகம் அவர்களின் அறிவாக மாறியது. மற்றவர்களுக்கு பயன் அற்ற வாசிப்பாகத்தான் இருந்தது, இதற்கு காரணம் என்னவென்று ஆய்வு செய்தேன்.

அதன் பலனாக கிடைத்த உண்மையை இந்த புத்தகத்தில் எழுதி இருக்கின்றேன்.

பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் எண்ணினான் பூமியை தான் சூரியன் சுற்றி வருகிறது என்று. ஆனால் இப்போது அது உண்மை அல்ல சூரியனைத்தான் பூமி சுற்றிவருகின்றது என்று உணர்ந்து விட்டான். அது போல்தான் நாம் இதுவரை படித்தவன்தான் அறிவாளி, புத்தகம் தான் அறிவைக் கொடுக்கும் என்று எண்ணி இருந்தோம். அது பொய் வாழ்க்கைதான் அறிவைக் கொடுக்கும். அனுபவம் தான் அறிவைக்கொடுக்கும் என்பது என்னுடைய ஆய்வின் அறிவியல் உண்மை. அதை இந்த புத்தகத்தில் பதிவு செய்து இருக்கிறேன்.

இது எத்தனைப்பேருக்கு புரியப்போகின்றதோ தெரியவில்லை. இருப்பினும் என் கடமையை நான்செய்கிறேன்.

புத்தகம் தகவலை மட்டும்தான் கொடுக்கும். அறிவைக் கொடுக்காது. . வாழ்க்கைஅனுபவம் தான் அறிவை கொடுக்கும்.

அதனால் படித்தவர்கள் எல்லோரும் அறிவாளிகள் அல்ல.. படிக்காதவர்கள் எல்லோரும் முட்டாள்களும் அல்ல. ஒருவன் வாழ்ந்த வாழ்க்கை தான் அவனை முட்டாளாகவும், அறிவாளியாகவும், மாற்றுகின்றது.

ஒருவனிடம் காய் எங்கு கிடைக்கும் என்றால் கடையில் இருந்து என்பான். அது போலதான் நீங்களும் அறிவு புத்தகத்தில் இருந்து கிடைக்கின்றது என்று எண்ணுவீர்கள்.

காய் கடையில் தான் விற்கப்படுகின்றது. அது விளைநிலத்தில் தான் உற்பத்தி ஆகின்றது. அது போல் தான் அறிவும் புத்தகம் வழியாக விற்பனை செய்ய படுகின்றது. ஒரு மனிதனின் அனுபவத்தில் தான் அறிவு விளைகின்றது.

ஒரு மனிதனுக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களால் மட்டும் தான் அறிவை கொடுக்க முடியும்.

மெய்: வலி தெரியாத, தொடுதலை உணர முடியாத ஒருவர் உணர்வுகளை பற்றி படித்து என்ன பயன்?
வாய்: சுவையை உணர முடியாதவன் சுவையைப்பற்றி படித்தால் அதை அவன் புரிந்து கொள்ள முடியுமா?

கண்: கண் இல்லாதவன் வண்ணங்களைப் பற்றி படித்து உணர முடியுமா?

மூக்கு: வாசனையை நுகர முடியாதவன், வாசனையைப் பற்றி படித்து என்ன பயன்?

செவி: செவி கேளாதவன் இசையைப் படித்து பயன்பெற முடியுமா? சிந்தியுங்கள்!

இது நாள் வரை உங்களுடைய ஐந்து புலன்களால் பெற்றஅனுபவ அறிவுடன் நீங்கள் படிக்கின்ற செய்தி சேர்ந்தால்தான் அது உங்களுடைய அறிவாக மாறும். அனுபவஅறிவு இல்லாமல் படித்து பயன் இல்லை.

பாலை தயிராக்குவதற்கு கொஞ்சம் தயிரை பாலில் சேர்ப்பதைப் போல், நாம் படிக்கின்ற செய்தி நம்முடைய

அறிவாக மாறுவதற்கு நம்மிடம் படிக்கின்ற செய்திக்கு தொடர்புடைய அனுபவ அறிவு வேண்டும்.

சிறுவயதில் நமக்கு ஏற்பட்ட சிறு தீப்புண்ணின் அனுபவம்தான் இன்று சூரியனின்வெப்பம் எவ்வளவு இருக்கும் என்ற அறிவியலைப் படிக்கும்போது உணர வைக்கின்றது அல்லவா, இது தான் அறிவு.

ஒரு மீட்டர் எவ்வளவு உயரம் என்பதை நீங்கள் பார்த்து இருந்தால்தான் | எவரஸ்டு சிகரம் 8848 மீட்டர் உயரம் என்பதை படித்ததும் புரிந்து கொள்ள முடியும்.

அனுபவம் இல்லாத படிப்பு பயன் அற்றது. எனவே ஒருவனுடைய அறிவு என்பது அவன் படித்ததைப் பொருத்து அல்ல. அவனுடைய அனுபவத்தைப் பொருத்ததே. அனுபவம் தான் அறிவுக்கு ஆதாரம்..

என்னுடைய இந்த தகவலை புரிந்து கொள்ளகூட இது தொடர்புடைய அறிவு வேண்டும். அறிவே இல்லாமல் அறிவைப்புரிந்து கொள்ள முடியாது.

ஒருவருடைய அனுபவம் மற்றொருவருடைய அனுபவமாக மாறாது.

ஒருவர் அனுபவித்ததை எழுத்தின் மூலம் வேறு ஒருவருக்கு அனுபவிக்க கொடுக்க முடியாது. ஆயுள் முழுவதும் படித்தாலும் பசியின் கொடுமையைப் பற்றி அறிய முடியாது, ஆனால் ஒரு நாள் சாப்பிடாமல் இருந்துப் பாருங்கள். பசி என்றால் என்ன என்று புரியும்.

பசியின் கொடுமையை வள்ளலார் அவர்கள் அறிந்ததால்தான், பசியில் வாடும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினார்.

பசி அறியாமல் வள்ளலார் வாழ்ந்து இருந்தால் அவர் அறிவு உலக மக்களுக்கு பயன்படாமல் போய் இருக்கும்.

மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பவர்களில் பலர், படித்து அதிக மதிப்பெண்பெற்று தேர்ச்சி பெற்றாலும் அதில் ஒரு சிலரே சிறந்த மருத்துவராகவும், பொறியாளராகவும் உருவாகின்றார்கள். அதற்குக் காரணம் நம் நாட்டில் செயல் முறையில் கல்வி  பயிற்றுவிப்பது இல்லை.

மிதி வண்டியை எப்படி ஓட்டவேண்டும் என்று நான்கு ஆண்டுகள் படித்துவிட்டு ஒட்ட முடியுமா? சிந்தியுங்கள், எத்தனை வருடங்கள் படித்தாலும் அனுபவம் இல்லாமல் மிதிவண்டியை ஓட்ட முடியாது. மிதிவண்டியை ஓட்டிய அனுபவத்தை பெற்ற பிறகு அதை சார்ந்த தகவலை அதாவது எவ்வளவு வேகம் போக வேண்டும், வளைவில் எப்படி போக வேண்டும், இடதுபக்கம் செல்ல வேண்டுமா, வலது பக்கம் செல்ல வேண்டுமா, சைகை எப்படி காண்பிக்க வேண்டும், மிதிவண்டியை எப்படி பராமரிக்க வேண்டும் என்று நாம் புத்தகத்தில் இருந்து கற்றால் அது நமக்குப் பயன்படும்.

மிதிவண்டியை ஓட்ட தெரியாதவனுக்கு மிதி வண்டி எப்படி ஒட்ட வேண்டும் என்பதை படிப்பது எப்படி பயன் அற்றதோ அதுபோல்தான் நம்  நாட்டில் மருத்துவமும், பொறியியலும் படிக்கும் மாணவர்களுக்கு போதிய அளவு செயல்முறை அனுபவம் இல்லாததால் ஒரு சில மாணவர்களே அறிவை பெற்று அறிவாளியாக வெளியே வருகின்றார்கள், மற்றவர்கள்

மதிப்பெண்களை மட்டும் பெற்று படிப்பாளியாக வெளியே வருகின்றார்கள்.

அனுபவம் இல்லாத மருத்துவரிடம் யாரும் வைத்தியம் பார்த்துக்கொள்ள மாட்டார்கள். அனுபவம் உள்ள மருத்துவரிடம் தான் மக்கள் செல்வார்கள். இதற்குக் காரணம் நோயை குணப்படுத்தக்கூடிய அறிவை. அனுபவத்தால் பெற்று இருக்கின்றார் என்பதுதான். அவர் பெற்ற அனுபவத்துடன் அவர்மேலும் மருத்துவம் தொடர்புடைய புத்தகத்தை படித்தால் அறிவு மேலும் வளரும். அனுபவமே இல்லாத நாம் அந்த புத்தகத்தை படித்து அனைத்து தகவல்களையும் நினைவில் வைத்து கொண்டால் நமக்கு அறிவு வளருமா!
அனுபவம் இல்லாத புத்தக தகவல் நமக்கு பயன்படாது.

நாமக்கல், ராசிபுரத்தில் முன்பு முட்டைக்காக கோழியை வளர்த்தார்கள். இப்போது மதிப்பெண்ணுக்காக மாணவர்களை வளர்க்கின்றார்கள். மதிப்பெண்ணுக்கும் முட்டைக்கும் எப்போதுமே நெருங்கிய தொடர்பு தான்.

மாணவர்களிடம் அறிவை வளர்க்க வேண்டும், ஆரோக்கியத்தை வளர்க்க வேண்டும், தனித்திறமையை வளர்க்க வேண்டும் என்று பல பெற்றோர்கள் சிந்திக்காமல் மதிப்பெண்மட்டுமே தேவை என்று எண்ணி முட்டைக்காக வளர்க்கும் கோழியைப்போல் மதிப்பெண்ணுக்காக வளர்க்கப்படும் மாணவனாக நாடு கடத்தப்படுகின்றான். இதை நம் படிப்பாளி சமுதாயம் தான் செய்து கொண்டு இருக்கின்றது.

புத்தகத்தைப் படித்து தகவலைப் பெறுவதும், சந்தையில் காய் வாங்குவதும் ஒன்று. சந்தையில் எப்படி காயை வாங்கவேண்டும்

என்று மாணவர்களுக்கு கற்று கொடுக்கின்றார்களே தவிர, எப்படி காயை பயிரிடவேண்டும் என்று கற்று கொடுப்பது இல்லை.

எப்போது அனுபவ அறிவை மாணவர்களுக்கு கற்றுகொடுக்கிறோமோ அப்போது தான் உண்மையான அறிவாளியை சமுதாயம் உருவாக்கும்; வறுமை ஒழியும்.

பல ஆண்டுகளாக நம் தமிழ்நாட்டில் பட்டிமன்றம் நடக்கின்றது. அதில் மிகவும் பிரபலமான தலைப்பு அறிவில் சிறந்த அறிவு அனுபவ அறிவா? அல்லது படிப்பறிவா? என்பது தான். இந்த புத்தகத்தை படித்தால் இனி இந்த தலைப்பில் பட்டிமன்றம் நடத்தமாட்டார்கள். காரணம் அறிவு என்றால் ஒரே அறிவுதான். அது நமக்கு அனுபவத்தால் மட்டும் தான் கிடைக்கின்றது.

அறிவு என்றால் அறிதல் அல்லது உணர்தல். இது தான் நமக்கு அறிவை கொடுக்கின்றது.

அனுபவம் இல்லாத ஒரு பொருளைப் பற்றி படிப்பதாலோ அல்லது . ஒருவர் நமக்கு சொல்வதாலோ நாம் அறிவைப் பெற முடியாது.

இதைத் தொட்டால் Shock அடிக்கும் என்று மின் சாதன பொருள்மீது எழுதி இருந்தது அதை இதுவரை மின்சாரத்தில் அடிபடாதவன் படித்து பார்த்துக்கொண்டு இருந்தான். இதை பார்த்த அருகில் இருந்தவர் சொன்னார். அதைத் தொட்டால் Shock அடிக்கும் என்றார். அது அவனுக்கு புரியவில்லை. கையை வைத்துப் பார்த்தான் மின்சாரம் தாக்கியது. இப்போது தான் அவனுக்குப்புரிந்தது மின்சாரத்தின் Shock எப்படி

இருக்கும் என்று. அருகில் இருந்தவர் கேட்டார் உனக்கு அறிவே இல்லையா என்றார்.

உண்மையில் அவனுக்கு அறிவு இல்லை தான். மின்சார Shock என்றால் என்ன என்பதை இதுவரைஅவன் உணர்ந்தது இல்லை. அதனால் அவன் படித்ததும், அவன் கேட்டதும் அவனுக்குப் பயன்படவில்லை.

மின்சாரத்தில் அடிபடாத ஒருவருக்கு, மின்சாரம் தாக்கினால் எப்படி இருக்கும் என்பதை எப்படி புரிய வைக்கலாம் என்றால், வலிக்கும், அல்லது விருக்குன்னு இருக்கும் என்று. ஏதேனும் ஒரு உணர்வை, அனுபவத்தை. ஒப்பிட்டு காட்டி அதுபோல் தான் இது இருக்கும் என புரிய வைக்கலாமே தவிர, அவன் உணராத, அல்லது அனுபவம் இல்லாத ஒன்றை கூறி அதுபோல் தான் இது இருக்கும் என்றால் அவனால் எப்படி அதை புரிந்து கொள்ள முடியும். எனவே நீங்கள் எதை பற்றி படித்தாலும், அல்லது கேட்டாலும், அது உங்களுடைய அறிவாக மாற வேண்டும் என்றால் அது தொடர்புடைய அனுபவம் உங்களிடம் இருக்க வேண்டும். அப்போது தான் நீங்கள் படித்தது அறிவாகமாறும். எனவே புத்தகத்தை படிப்பவர்கள் பலர் தான் படித்ததை தன்னுடைய அறிவாக மாற்றிக்கொள்வது இல்லை. அதனால் படித்தவர்கள் அனைவரும் அறிவாளிகள் அல்ல. ஆனால் அனுபவம் உள்ளவர்கள் அனைவரும் அறிவாளிகள் தான். என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

படித்தவர்கள் அறிவைப் பெறவேண்டும் என்றால் அனுபவத்தைப் பெறவேண்டும்.

அனுபவம் உள்ளவர்கள் அறிவை மேலும் வளர்க்க வேண்டும் என்றால் | படிக்க வேண்டும். அறிவாளிதான் அறிவை பெற முடியும், அறிவு இல்லாதவன் அறிவைப் பெற முடியாது.

அனுபவம்தான் அறிவு! படிப்பறிவு என்று ஒன்று இல்லவே இல்லை.

கணிதத்தை கற்றுக்கொள்வதற்கும் அனுபவம் வேண்டும். அனுபவம் இல்லாமல் கணிதம் புரியாது. முதல் வகுப்பில் படிக்கும் போது ஒரு பழத்தை காண்பித்து ஒன்று என்றும், பத்து பழத்தை காண்பித்து பத்து என்றும் சொல்லி கொடுத்தார்கள். அந்தஅனுபவத்தில் இருந்து பல அனுபவத்தை நாம் பெற்றதால் தான் நமக்கு கணிதம் புரிகின்றது.

அனுபவம் இல்லையென்றால் பத்து என்றால் என்ன என்றே புரியாது. இது போல் அனைத்து அறிவும் அனுபவத்தால் தான் நம்முள் வருகின்றது.

ஆன்மீகம் என்றால் நம்பவேண்டும், கேள்விக்கேட்க கூடாது. அறிவியல் என்றால் நம்பக்கூடாது. புரிந்து கொள்ள வேண்டும், கேள்வி கேட்கவேண்டும்.

பூமியின் நிகழ்வுகளை அறிந்து கொள்வதுதான் அறிவியல்.. அறிவியலை செயல் விளக்கத்தால் ஒருவர் மற்றொருவருக்கு புரியவைக்க முடியும். நம்ப வேண்டும் என்று கட்டாயப்படுத்த தேவை இல்லை. இதுதான் உண்மையான அறிவியல்.

ஆனால் அறிவியல் என்று சொல்லிக்கொண்டு வாஸ்த்து பலன், ராசி ஜோதிடம், எண்கணித ஜோதிடம், கைரேகை ஜோதிடம்

என்று பல ஜோதிடர்கள் பணம் சம்பாதிப்பதற்காக புத்தகம் எழுதி மக்களை முட்டாள்களாக உருவாக்கி இருக்கிறார்கள்.

புத்தகத்தில் எது இருந்தாலும் அனைத்தும் உண்மை என்று எண்ணி, சிந்திக்காமல் நம்புகின்றவர்கள் படித்தவர்கள்தான்.

அறிவுடையவன் அறிவியலைக்கூட நம்பமாட்டான். அதை புரிந்து கொள்ள செயல்முறை விளக்கம் கேட்பான். விளக்கம் சரியானதாக இருந்தால் தான் அதை உண்மை என்று ஒத்துக்கொள்வான்.

உலக அறிவியலில் இல்லாத ஒன்றை அறிவியல் என்று சொல்லி பல லட்சம் வாஸ்த்து மற்றும் ஜோதிடப் புத்தகங்கள் விற்கின்றன என்றால் எவ்வளவு படித்த அறிவு அற்றவர்கள் நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்று எண்ணிப்பாருங்கள். அவர்களில் நானும் ஒருவன். சிறு வயதில் இவைகள் உண்மை என எண்ணி படித்தது உண்டு.

புத்தகம் அறிவை கொடுத்து இருந்தால் படித்தவர்கள் ஏன் அறிவியல் என்று ஏமாற்றுகின்ற வாஸ்த்து மற்றும் ஜோதிடப் புத்தகங்களை அதிக அளவு வாங்க வேண்டும் சிந்தியுங்கள்.

ஒருவர் நம்பிக்கையை மற்றவர் புண்படுத்தக் கூடாது என்று அறிவாளி முன்னோர்கள் நினைத்து இருந்தால் இப்போது நம் சமுதாயம் முழுவதும் அறிவு அற்ற சமுதாயமாகத்தான் இருந்து இருக்கும்.

நம்பிக்கை என்பது வேறு. நம்ப வைத்து ஏமாற்றுவது என்பது வேறு. நாளைய பொழுது விடியும் என்றால் நம்பிக்கை.

பணத்துக்காக பரிகாரம் என்றால் நம்பவைத்து ஏமாற்றும் வேலை.

குரங்கை நினைக்காமல் இந்த மருந்தை சாப்பிட வேண்டும் என்றால் எப்படி குரங்கை நினைக்காமல் சாப்பிட முடியும். மருந்தை கையில் எடுக்கும் போதே குரங்கு நினைவுக்கு வந்துவிடும் அல்லவா. நாம் எதை கேட்டோமோ எதை பார்த்தோமோ அது நம் அனுமதி இல்லாமலேயே நம்மை ஆள ஆரம்பித்துவிடும்.

மூலிகைபெட்ரோலை ஒருவர் கண்டு பிடித்தேன் என்றார். ஆனால் அவரால் செயல்முறை விளக்கம் கொடுக்க முடியாததால் அவர் சொன்னது பொய் என்று அரசு அறிவித்துவிட்டது. அது போல் வாஸ்த்து மற்றும் ஜோதிடப்புத்தகம் எழுதியவர்கள் அவர்கள் எழுதியதை செயல்முறையில் நிருபிக்கவேண்டும். அப்படி அவர்கள் நிருபிக்கத் தவறினால் அவர்கள் எழுதிய புத்தகங்களை அரசு தடை செய்யவேண்டும்.

புத்தகத்தின் பக்கங்களின் எண்ணிக்கையை பார்க்காமல் புத்தகத்தில் உள்ள செய்திகள் காப்பி & பேஸ்ட் என்ற முறையில் பத்து புத்தகத்தில் இருந்து பல செய்திகளை எடுத்து ஒரு புத்தகம் அச்சிடுவது போல் இல்லாமல் அறிவு பூர்வமாகவும், மக்களுக்கு பயன்படக்கூடியதாகவும் உள்ள புத்தகங்களை மக்களிடம் கொண்டு செல்லும் பணியை அரசு சிறப்பாக செய்து அறிவான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

திருக்குறளை படித்து ஒப்பித்தவர்கள் அனைவரும் திருவள்ளுவரின் அறிவை பெற்றது இல்லை. ஆனால்

திருக்குறளைப் படிக்காத பலர்திருக்குறள் போன்ற நூலை எழுதக்கூடிய அளவுக்கு அறிவைப் பெற்று இருக்கின்றார்கள்.

பல மாணவர்கள் திருக்குறள் அனைத்தையும் தெளிவாக ஒப்பிப்பார்கள், ஆனால் அது என்ன என்று அவர்களுக்குப் புரியாது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்று திருள்ளுவர்சொன்னது போல், ஒருவன் கற்க வேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு அக்கல்விக்குத் தகுதியுடையவனாக நடக்க வேண்டும்.

ஒருவருக்கு அவர்கள் படித்தது அறிவை கொடுக்கவில்லை என்றால் அவர் படித்தது பயன் இல்லை என்று பொருள்.

படித்ததை நினைவில் வைத்துக்கொண்டு தேர்வில் மதிப்பெண் வாங்குவது  அறிவின் வெளிப்பாடு அல்ல. அது நினைவாற்றலின் திறன். ஓவியம் வரைவது, நீளம் தாண்டுவது போல் இதுவும் ஒரு திறன் தானே தவிர கல்வியைக் கற்றதாக பொருள் அல்ல. ஒப்பித்தலை அறிவு என்று எண்ணாது திறமை என்று எண்ணுங்கள். இரண்டுக்கும் உள்ள நுட்பமான வேற்றுமையை புரிந்து கொள்ளுங்கள்.

மாணவர்களிடம் நினைவுத்திறனுடன் சிந்தனைத் திறனையும் வளர்க்க வேண்டும். நூறு ரூபாய் SD Card ஆல் ஒரு மாணவனின் நினைவுத்திறனைப் நாம் பெற்றுவிடலாம். ஆனால்

சிந்தனைத் திறனை எத்தனை கோடி கொடுத்தாலும் பெற முடியாது. அது தான் அறிவு.

படித்தவன் என்றால் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும், ஆனால் இன்று படித்தவர்கள் பலர் வழி தெரியாமல் என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கின்றார்கள்.

# மனசாட்சியும், நீதியும்

மனசாட்சி என்பது, புனிதமானது, தவறு செய்யாதது, அது இறைவன் சாட்சி என்று நாம் நினைப்பதால் மனசாட்சியாக நீதி இருந்தால் சரியாகவும், நேர்மையாகவும் இருக்கும் என்று எண்ணுகின்றோம் அது தவறு.

மனசாட்சி என்பது, ஒருவன் பெற்ற அறிவுதான், அவனுடைய மனசாட்சிக்காக அவனிடம் உள்ளது. அவன் அறிவு எதை சரி என்று சொல்லுகின்றதோ அதை அவன், தீயவையாக இருந்தாலும் சரி, நன்மையாக இருந்தாலும் சரி, தான் செய்வது சரி என்று எண்ணி செய்கின்றான்.

ஒருவனுடைய அறிவு வளர வளர அவன் மனசாட்சி மாறி கொண்டே இருக்கும்.

நீதிக்கு நேர்மை மட்டும் போதாது அறிவும் வேண்டும்.
அறிவு உள்ள நீதி அரசரால் தான் சரியான நீதி வழங்க முடியும்.

# வேறுபாடுகள்

முன்பு பழமையான சாதி என்ற ஒரு வேறுபாடுதான் இருந்தது ஆனால் இப்போது மதம், தொழில், கல்வி, பொருளாதாரம், என்று பல வேறுபாடுகள் மக்களிடம் உருவாகிவிட்டது. எனவே புதிய வேறுபாட்டால் பழைய வேறுபாடான சாதி தானாகவே அழிந்துவிடும். ஆனால் மக்களிடம் உள்ள வேற்றுமை உணர்வு அழியாது.

அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, மதக்குருக்கலாக இருந்தாலும் சரி. அனைவரும் சாதி வேறுபாடு ஒழிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டே புதிய வேறுபாட்டை ஆதரிக்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் மற்றவர் இடம் இருந்து வேறுபட்டு தனி தன்மையோடு வாழவேண்டும் என்று எண்ணுகின்றான். அதை இந்த சமுதாயமும் ஆதரிக்கின்றது.

ஒவ்வொரு சாதிக்கும், ஒவ்வொரு மதத்துக்கும் ஒவ்வொரு மொழிக்கும், தனி தன்மையும், வேறுபாடும் உண்டு. ஒவ்வொரு மனிதனும் மற்ற மனிதர்களிடம் இருந்து பல வேறுபாடுகளுடன்தான் வாழ்கின்றான், இதை தான் தனித்தன்மை என்று பெருமை பேசி கொள்கின்றான். சாதி வேறுபாட்டை விடப் பெரிய வேறுபாடு மதவேறுபாடும், பொருளாதார வேறுபாடும்தான். இந்த இரண்டு வேறுபாட்டையும் ஒழிக்க வேண்டும் என்று ஏன் எந்த அரசியல் தலைவர்களும் பேச மறுக்கின்றார்கள். மதம் ஒழிய வேண்டும் என்றால் பன்னாட்டு பிரச்சனையாகிவிடும். பொருளாதார வேறுபாட்டை சமன் செய்ய வேண்டும் என்று கூறினால் வீட்டுப் பிரச்சனையாகிவிடும். குறுக்கு வழியில் சேர்த்து வைத்த பணம்

அனைத்தும் போய்விடும். எனவே மலிவான அரசியல் செய்வதற்குதான் சாதி மட்டும் ஒழிய வேண்டும் என்றும் கூறுகின்றார்கள்.

சாதி கொடுமை என்ற ஒன்று நம் நாட்டில் இல்லை பொருளாதாரக் கொடுமை தான் நம் நாட்டில் நடக்கின்றது. ஆம் பணக்காரன் தான் ஏழையை கொடுமைப்படுத்து கின்றானே தவிர உயர்ந்த சாதியை சேர்ந்தவன் தாழ்ந்த சாதியினரை கொடுமைப்படுத்துவது இல்லை.

பணக்கார சமுதாயம்தான் ஏழை சமுதாயத்தை கொடுமை படுத்துகின்றது.

உயர்ந்த சாதியை சேர்ந்த பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டால் பெண் கொடுமை என்று ஊடகங்கள் சொல்கின்றன. ஒரு தாழ்ந்த சாதி பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டால், சாதிகொடுமை என்று ஊடகங்கள் சொல்கின்றன. இரண்டு பேரும் பெண்தானே ஏன் இரண்டையும் பெண்கொடுமை என்று ஊடகங்கள் சொல்லவில்லை. அரசியல் தலைவர்களும், சாதி தலைவர்களும், மக்களிடம் சாதி அரசியல் செய்ய வாய்ப்பு உள்ள இடங்களில் எல்லாம் சாதிப் பிரிவினையை பேசி மக்களை பிரித்து ஆள்கின்றாார்கள்.

கொடுமை செய்வது என்பது வேறு, வேற்றுமைப் பார்ப்பது என்பது வேறு.

ஒரு மருத்துவர் மற்றோர் மருத்துவரிடம் வேற்றுமை பாராமல் பழகுவார்.

அதே மருத்துவர் சாமானிய மனிதனிடம் வேற்றுமைப் பார்ப்பது உண்டு. இது கொடுமை அல்ல அது அவரின் உரிமை.

அது போல் ஒரு சாதியினர் வேறு சாதியினர் இடம் வேற்றுமைப் பார்ப்பதும்,
ஒரு மதத்தவர் வேறு மதத்தவர் இடம் வேற்றுமை பார்ப்பதும்,
படித்தவன் படிக்காதவனிடம் வேற்றுமை பார்ப்பதும்.
ஒழுக்கமானவர் ஒழுக்கம் இல்லாதவனிடம் வேற்றுமைப் பார்ப்பதும்,
ஆடை தூய்மை உடையவர் ஆடை தூய்மை இல்லாதவனிடம் வேறுபாடுப் பார்ப்பதும்,
செல்வந்தர் ஏழையிடம் வேறுபாடுப் பார்ப்பதும்,
ஆண் பெண்ணிடம் வேறுபாடுப் பார்ப்பதும்,
முதலாளி தொழிலாளியிடம் வேற்றுமைப் பார்ப்பதும்,
தலைவர் தொண்டனிடம் வேற்றுமைப் பார்ப்பதும்,
முதல் அமைச்சர், அமைச்சரிடம் வேற்றுமை பார்ப்பதும்,
நம் சமுதாயத்தில் இயல்பான ஒன்றுதான்.

நம் சமுதாயத்தில் வேற்றுமை பார்ப்பது என்பது தவறான செயல் அல்ல. அது கொடுமையும் அல்ல. பிறகு எதற்காக சாதி வேற்றுமையை மட்டும் கொடுமை என்றும் சொல்லி அரசியல் தலைவர்கள் மக்களிடம் வன்முறையை தூண்டவேண்டும்.

மனிதனுக்கு ஒழுக்கத்தை போதிக்க சான்றோர்கள் மதத்தை உருவாக்கியது போல், சாதியை யாரும் உருவாக்கவில்லை, அவர் அவர்கள் செய்த தொழிலே சாதியாக மாறிவிட்டது. எந்த தொழிலில் அதிக வருவாய் கிடைத்ததோ அந்த தொழிலை செய்தவர்கள் உயர்ந்த சாதியாகவும், குறைந்த வருவாய்

கிடைத்த தொழிலை செய்தவர்கள் தாழ்ந்த சாதியாகவும் கருதப்பட்டார்கள். அன்று முதல் இன்று வரை வருவாய் அதிகம் வருகின்ற தொழிலை செய்பவர்களைதான் நாம் உயர்ந்தவர்களாக பார்க்கின்றோம்.
அன்று கூத்தாடி என்று ஏளனம் செய்தோம்.
இன்று நட்சத்திரம் என்று கோயில் கட்டுகின்றோம்.
அன்று மேளக்காரன் என்று சொன்னோம்.
இன்று இசை அமைப்பாளர், ஞானி, மன்னர் என்று போற்றுகின்றோம்.
அன்று பார்பர் என்று சொல்லி தள்ளி நின்றோம்.
இன்று அழகுகலை நிபுணர் என்று சொல்லி தழுவி நிர்க்கின்றோம்.
அன்று பிராமணரை சாமி என்றோம்.
இன்று சாமி ஆசாமி ஆகிவிட்டது.

அன்று மக்கள் பிராமணர்களுக்கு அதிக பொருட்களை தானமாக கொடுத்தார்கள். அதனால் அவர்கள் சாமியாக இருந்தார்கள், இன்று ஒரு ரூபாயை யாராவது தட்டில் போடமாட்டார்களா என்று காத்து நிற்கின்றார்கள். அதனால் இன்று அவர்கள் சாதாரண மனிதர்களாக ஆகிவிட்டார்கள்.

எனவே செய்கின்ற தொழிலை வைத்து ஒருவனை உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று யாரும் எண்ணியது இல்லை. ஒருவனிடம் உள்ள செல்வத்தை வைத்துத்தான், அவன் உயர்ந்தவனாகவும், தாழ்ந்தவனாகவும் கருதப்படுவான் என்பது தான் உண்மை.

ஒரு தாழ்ந்த சாதியினரிடம் பணத்தை கொடுத்துப் பாருங்கள், அவரை எத்தனைப்பேர், அய்யா, சார், ஜி என்று உலகில் உள்ள அனைத்து மரியாதைக்கு உரிய வார்த்தையையும் பயன்படுத்தி

அழைப்பார்கள். அதுபோல் ஏழையாக உள்ள உயர்ந்த சாதியினரை எப்படி மற்றவர்கள் ஏலனமாக நடத்துகின்றார் என்பது தெரியும்.

அன்று தாழ்ந்த சாதியினரை கோயில் உள்ளே விடமாட்டார்கள் இன்று பணம் இல்லாதவன் சாமி தரிசனம் செய்ய முடியாது. காத்து இருக்க வேண்டியதுதான்.

சாதி என்றால் இரண்டு சாதி தான் ஒன்று பணக்கார சாதி, மற்றொன்று ஏழை சாதி, இது ஒழிய வேண்டும் என்றால் சாதி அடிப்படையில் ஆன ஒதுக்கீட்டுக்குள் பொருளாதார அடிப்படையில், அரசின் சலுகைகள் ஏழை மக்களுக்கு கிடைக்க வேண்டும். மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் அதிக ஏற்ற தாழ்வு இல்லாத ஊதியம் வழங்கப்படவேண்டும்.

சாதி வேறுபாடு அதிகம் இருந்த போதுகூட யாரும் சாதியை வளர்க்கவில்லை, ஆனால் இப்போது சாதி அழிய கூடாது என்று எண்ணி, சாதி ஒழிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டே, தான் வாழ சாதியை வாழ வைக்க வேண்டும் என்பதற்க்காக பல அரசியல் மற்றும்சாதி கட்சிகள் பொருளாதார ஒதுக்கீட்டை எதிர்க்கின்றார்கள். சாதி கலவரங்களை உருவாக்குகின்றார்கள். இதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஔவையார் அவர்கள் சாதியை கொடுமை என்று சொல்லவில்லை, உலகிலேயே கொடியது இளமையிலே வறுமை என்றுதான் கூறிஉள்ளார்.

நம் நாட்டில் உள்ளது சாதி கொடுமை அல்ல, சாதி வேற்றுமை தான், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் நாகரிகம், எனவே அனைத்து சாதியினர்களும் ஒன்று சேர்ந்து வறுமையின் கொடுமையை ஒழிப்போம்! வேற்றுமையை குறைப்போம்!

# கலப்பு திருமணம்

திருமணம் என்றால் கலப்பு, சங்கமம் என்று தான் பொருள். படித்தவன், படிக்காத பணக்கார பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான்.
பணக்காரன் படித்த ஏழை பெண்ணை திருமணம் செய்கிறான்.
படித்த பணக்காரன் தாழ்ந்த சாதியை சேர்ந்தவனாக இருந்தாலும் உயர்ந்த சாதி பெண்ணை திருமணம் செய்கிறான்.
இது போல் அனைத்து திருமணமும் பல பேறுபாடுகள் கொண்ட கலப்புத் திருமணமாகதான் நடக்கின்றது. ஒரு வேறுபாடு மற்றொரு வேறுபாட்டை சமன்செய்துவிடுகிறது.
சாதி கலப்புதிருமணத்திற்கு தேவை கல்வியும், செல்வமும்தான். காதல் அல்ல.
காதல் சாதியை மட்டும் ஒழிக்காது சமுதாயத்தின் ஒழுக்கத்தையும் சேர்த்து ஒழித்துவிடும். எனவே காதலை ஆதரிப்பதென்பது மூட்டை பூச்சை ஒழிக்க வீட்டை கொளுத்துவதற்கு சமம்.

# பாதுகாப்பும், சுதந்திரமும்

நம்முடைய வீட்டை பூட்டி கொண்டு இருந்தால் பாதுகாப்பாக இருப்பதாக பொருள்.

நம்மை வீட்டில் வைத்துப் பூட்டி வைத்தார்கள் என்றால் அடிமைப் படுத்துகின்றார்கள் என்று பொருள்.

அதே வீடுதான், அதே பூட்டுதான், ஆனால் செயலுக்கு ஏற்ப பொருள் மாறுபடுகின்றது அல்லவா.

அது போல்தான் பெண்கள் ஆடை கட்டுப்பாடுடன் ஒழுக்கமாக இருந்தால் அவர்களுக்கு பாதுகாப்பு.

ஒரு பெண்ணிடம் ஆடை கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும் நிர்பந்தித்தால் அது அடிமை படுத்துவதாக பொருள்.

ஒரு பெண் ஆடை கட்டுப்பாட்டும், ஒழுக்கத்தோடும் இல்லையென்றால் அவர் சுதந்திரமாக இருக்கின்றார் என்று பொருள் அல்ல.

ஒரு வீடு பாதுகாப்பு இல்லாமல் திறந்தே இருந்தால் அந்த வீட்டில் விலை உயர்ந்த பொருள் எதுவும் இல்லை என்றுதான் பொருள்.

அது போல்தான் ஒரு பெண்ணிடம் ஆடை கட்டுப்பாடும், ஒழுக்கமும் இல்லை என்றால் அவரிடம் மதிப்பிடமுடியாத மானம் என்ற ஒன்று இல்லை என்றுதான் பொருள்.

பெண்கள் என்றால் அனைவரும் பெண்கள் அல்ல, பெண்கள் உருவத்தில் பல திரைப்பட நடிகைகள் இந்த சமுதாயத்தின் ஒழுக்கத்தை கெடுக்கின்றார்கள். அவர்களை பார்த்து பல ஒழுக்கமான பெண்கள் சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்கும் வேறுபாடு தெரியாமல் கெட்டு விடுகின்றார்கள்.

ஒரு பெண், சுதந்திரம், அடிமைத்தனம், பாதுகாப்பு இந்த மூன்றுக்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொண்டு பாதுகாப்பாக வாழ வாழ்த்துக்கள்.

# யார் ஞானி ?

ஞானி என்றால் அனைத்தும் அறிந்தவர், இறைவன் அருள் பெற்றவர், என்று பலரும் நினைப்பது உண்டு, அது தவறு, அனைத்தும் அறிந்தவர் இந்த உலகில் யாரும் இல்லை.
ஔவையார் சொன்னது போல் கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு, இது அனைவருக்கும் பொருந்தும்.
அப்படி என்றால் யார் ஞானி.
“நான் நான்அல்ல" என்பதை யார் புரிந்து நடந்து கொள்கின்றார்களோ அவர்தான் ஞானி.
“நான் நான்அல்ல” என்பது வெறும் வார்த்தை அல்ல அது மந்திரம்.
“நான் நான்அல்ல” என்பது வார்த்தை அல்ல அது வலியின் மருந்து.
"நான் நான்அல்ல" என்று எண்ணுவது அறிவின் உச்சம்.
மது எப்படி உணர்வின் உச்சத்துக்கு ஒருவரை கொண்டு செல்கின்றதோ அது போல் "நான் நான்அல்ல” என்ற மந்திரம் அறிவின் உச்சத்துக்கு நம்மை கொண்டு செல்லும்.
என்னை நான் என்று நினைப்பது என்பது உணர்வு, என்னை நான்அல்ல என்று நினைப்பது அறிவு.
என்னை நான் என்று நினைப்பதால் எனக்கு என் வலித் தெரிகின்றது, மற்றவரை நான் என்று நான் எண்ணாததால் அவர் வலி எனக்கு தெரியவில்லை.
என் உறவினர் என்பதால் அவர் வலியில் பாதியை நான் உணர்கின்றேன்.
அவரும் மனிதர்தான் என்பதால் பிறர் வலியில் சிறியதை நான் உணர்கின்றேன்.

மிருகம் என்பதால் அதன் வலி எனக்கு தெரியாமல் அதை கொன்று வாழ்கின்றேன்.

எதுவெல்லாம் நம்முடையது என்று நாம் எண்ணுகின்றோமோ, அதுவெல்லாம் நமக்கு இன்பத்தையும், துன்பத்தையும் கொடுக்கின்றது.

எதுவெல்லாம் நம்முடையது அல்ல என்று எண்ணுகின்றோமோ அது நமக்கு எதையும் கொடுப்பது இல்லை.
நம்முடைய உடலைதான் நான் என்று எண்ணுகின்றோம் மற்றவர் உடலை நான் என்று நினைப்பது இல்லை. எனவே தான் மற்றவர் வலி நமக்கு தெரிவது இல்லை.
நான் என்று சொல்ல இந்த உலகில் நமக்கு என்று ஒன்று எதுவுமே இல்லை. நான் என்பது மாயய்.
உடலுக்கு பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. உடல் எப்போதும் பல உருவத்தில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கும். நான் என்ற உணர்வுதான் பிறக்கின்றது. இறக்கின்றது. எனவே உயிர் என்பது பொய், உடல் என்பதுதான் மெய், முன்னோர்கள் உயிரை மெய் என்றும், உடலை பொய் என்றும் சொன்னது தவறு.

நான் என்று நம்மை நாம் உணர்வது அனைத்து உயிரின் இயல்பான உணர்வு. அதுதான் உயிரை வாழவைக்கின்றது. அனைத்து உயிரிலும் நான் இருக்கின்றேன். என்று உணர்பவர் தான் ஞானி. அதனால் தான் வள்ளலார் அவர்கள் அனைத்து உயிரையும் தன் உயிர்ப்போல் எண்ணினார்.
நாம் மனிதர்களையாவது தன்னைப் போல்தான் அவர்களும் என்று எண்ண முயல்வோம்.